# அறைகலன்கள் வடிவமைப்பாளர் (Furniture Designer)



மனிதனின் வாழ்விடம் என்பது குகைகளில் இருந்த போதே மரக்கட்டைகளை இருக்கைகளாகவும் அகலமான கற்களை மேசைகளாகவும் மெத்தென்ற பாசிகள் வளர்ந்த இடங்களை படுத்துறங்கும் மெத்தைகளாகவும் பயன்படுத்தி வந்துள்ளான். பின்னர் கற்கள்,எலும்புகள், மரங்கள், நெகிழி மற்றும் உலோகங்களின் பயன்பாட்டை அறிந்து கொண்டபின் அவற்றைப் பயன்படுத்தும் வடிவங்களில் மிகப்பெரிய மாற்றத்தையும் அவற்றின் பயன்பாட்டில் எளிமைத்தன்மையையும் புகுத்தி காலத்திற்கேற்ற வடிவங்களில் அறைகலன்களை வடிவமைத்துக் கொண்டான். அன்றிலிருந்து இன்றுவரை அறைகலன்களின் வடிவமைப்பு, உற்பத்தி, விற்பனையில் அதிக அளவிலான வேலைவாய்ப்புகள் உருவாகிக் கொண்டே உள்ளன. அறைகலன்களின் பயன்பாடானது இல்லத்தில் தொடங்கி அலுவலகம்,தொழிற்சாலை,பள்ளி,கல்லூரி நிறுவனங்கள்,பொழுதுபோக்கு பூங்காக்கள் ,விமானங்கள் மற்றும் கப்பல்களின் இருக்கைகள் என நீண்டு கொண்டே போகின்றது.

## தொழில் துறை:-பொருட்கள் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி

### பணியின் விளக்கம்:



அறைகலன் வடிவமைப்பாளரானவர் (Furniture Designer) அழகியல் கண்ணோட்டத்துடன் புதிய வடிவமைப்புகளுடன் கூடிய அனைத்துவிதமான இருக்கைகளை வடிவமைத்துத் தரக்கூடிய பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.அங்ஙனம் வடிவமைக்கும்போது அவ்வறைகலன்களை பயன்படுத்துவோருக்கு இசைவாகவும், வாங்குவோர் திறனுக்கேற்றவாறு இருப்பதாகவும், பயன்படும் இடத்திற்கேற்றாவாறாகவும் வடிவமைப்பதில் திறன்பெற்றவராக இருக்க வேண்டும். அதற்கேற்றார்போல் ஆய்வுகள் மேற்கொண்டு பல்வேறு இடங்களுக்குச் சென்று சுற்றிப் பார்த்து ஆராய்ந்து அதன்பின் அவற்றிற்கான வடிவங்களை எண்ணத்திலும் கணினியிலும் வடிவமைத்து அதனை செய்யக்கூடிய தொழிற்முறை கலைஞரிடம் விளக்கிச் சொல்லக்கூடிய திறனுடையவராக இருத்தல் அவசியம். மேலும் வடிவமைக்கும் அறைகலனை செய்ய ஆகும் செலவினைக் கணக்கிட்டு உற்பத்திச் செலவினை குறைக்கக் கூடிய உத்திகளை அறிந்தவராகவும் உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட்களின் தரம் மற்றும் கிடைக்குமிடம் பற்றியுமான தகவலறிவு பெற்றவராகவும் இருக்கவேண்டும்.

### பணிச் சூழ்நிலை :

அறைகலன்களைப் பயன்படுத்துவோரின் விருப்பத்தையும் பயன்படுத்தக் கூடிய இடத்தையும் ஆய்ந்து அதன்பின் வடிவமைக்கும் வேலையை செய்யவேண்டியுள்ளதாலும், தொழிற்கூடங்களுக்கு சென்று வடிவமைத்த அறைகலன்களின் அமைப்பை ஆய்வு மேற்கொள்ளவேண்டியுள்ளதாலும் அடிக்கடி பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். தொழிற்கலைஞர்களுன் சேர்ந்து பணியாற்ற வேண்டியதால் குழுவாக இணைந்து செயல்பட வேண்டியிருக்கும்

உள்ளூர்களிலும் பணிநிமித்தம் பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். பகுதி நேரமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலேயும் பணி புரியலாம்.

## பணி நேரம் :–

வாரத்தில் 5/6 நாட்கள் எட்டிலிருந்து ஒன்பது மணி நேரம் பணிபுரிய வேண்டும் சுழற்சி முறையில் பணிபுரியலாம். சுய வேலைவாய்ப்பாகச் செய்யும் நேர்வில் வேலை நாட்கள் மற்றும் வேலை நேரம் மாறுபடும்.



## மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்ததா:–

ஒரு கால்/இரு கால்களில் குறையுடையோர் மற்றும் காது கேளாதோர் இப்பணியினைச் செய்யலாம்.

## முக்கிய திறன் தேவைகள்:–

மனதில் தோன்றும் யோசனைகளை காட்சிப் படுத்தி அதனை வடிவமாக வரைதல் மற்றும் கணினியின் உதவியோடு வரையும் திறன்.

பல்வேறு வகையான மரங்கள் மற்றும் உலோகங்கள் அவற்றின் தன்மைகள் கிடைக்குமிடம் பற்றிய அறிதல்,தேர்வு செய்து வாங்கக் கூடிய தெளிவு.

வாடிக்கையாளர்கள் மற்றும் வாங்குவோரின் ரசனை மற்றும் விருப்பத்தை அறிய நன்கு பேசக்கூடிய திறன்.

கற்பனை செய்த வடிவத்தை தொழிற்கலைஞர்களுக்கு விளக்கிச் சொல்லக்கூடிய திறன்.

## விரும்பக்கூடிய திறன் தேவைகள்:–

தற்கால சந்தை நிலவர அறிவு, மரங்கள், மண், நெகிழி மற்றும் உலோகங்கள் பயன்பாடு பற்றிய தெளிவு

## கல்வித்தகுதிகள் மற்றும் அவைகளை அளிக்கும் கல்வி¨ பயிற்சி நிலையங்கள் :–

குறைந்த பட்ச கல்வித்தகுதி 10 / 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றபின் நேரடியாக அறைகலன்கள் வடிவமைப்புப் பிரிவில் பட்டப்படிப்பு படிக்க வேண்டும்.

## பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்புகளைத் தரும் கல்வி நிலையங்கள்

| வ.எண் | வழங்கப்படும் கல்வி | வழங்கும் நிறுவனம் |
|---|---|---|
| 1 அ) | U.G program<br>1. Fired Material Design ( Ceramics, Earthware, Stonewear, Terracotta)<br>2. Hard Material Design(Wood, Metal, Stone)<br>3.Soft Material Design ( Leather, Paper, Natural Fibre & Textile Design) | Indian Institute of Craft and Design, Jaipur<br>UCEED (Undergraduate Common entrance Exam for Design) நுழைவுத்தேர்வு வாயிலாக சேர்க்கை நடைபெறும் |
| ஆ) | P.G program<br>1. Fired Material Specialization ( Ceramics, Earth ware, Stone wear, Terracotta)<br>2. Hard Material Specialization(Wood, Metal, Stone)<br>3. Soft Material Specialization, ( Leather, Paper, Natural Fibre & Textile Design) | முடித்தவர்கள் CEED (Common entrance Exam for Design) நுழைவுத்தேர்வு எழுதி இப்படிப்பில் சேரலாம் |
| இ) | Certificate in Wooden Furniture Design | $12^{th}$ finished Interested candidates can apply directly to the college |
| அ) | U.G program : B.Des,(Design Aptitude Test DAT)<br>Furniture and Interior Design | National Institute of Design, Ahmedabad, Bangaluru and Gandhinagar, Gujarat. UCEED மற்றும் CEED நுழைவுத்தேர்வு வாயிலாக சேர்க்கை நடைபெறும். |
| ஆ) | P.G program:M.Des<br>Furniture and Interior Design | |
| | Master of Design in Furniture Design | Centre for Environmental Planning and Technology, Ahmednagar, Gujarat. Gujarat. bachelor's degree in Interior Design/ Interior Architecture/ Design/ Architecture/ Construction Technology can apply for FD PG Common Design Aptitude Test. |
| அ) | **B.Des (Graduate and post Graduate courses) in Interior Space and Furniture Design Courses** | MAEER's MIT Institute of Design<br>Near Loni Railway Station, Off Pune-Solapur Highway, Rajbaug, Loni Kalbhor, Maharashtra 412201<br>H.Sc passed in DAT can undergo |
| ஆ) | M.Des post Graduate courses) in Interior Space and Furniture Design Courses | Graduate passed in DAT can undergo |

### தொழில் வளர்ச்சி பாதை:–

ஒவ்வொரு நாளும் மக்கள் தொகைப் பெருகப்பெருக மனிதர்களின் தேவை மாறிக் கொண்டே வருகிறது வீடு, அலுவலகம், போக்குவரத்து, பொழுதுபோக்குமிடங்கள் என பல்வேறு இடங்களில் மரம்,உலோகம், நெகிழி மற்றும் மண்களால் ஆன அறைகலன்களின் தேவைகளும் அதிகரித்துக் கொண்டேதான் உள்ளன. எனவே இத்துறையில் வேலைவாய்ப்புகள் எப்போதும் பெருகிக்



கொண்டேயிருக்கும்.மேலும் Chartered Society of Designers (CSD) –ல் இணைந்து தொழிலினைப் பெருகச் செய்யலாம்.

**இளநிலை வடிவமைப்பாளர்– முதுநிலை வடிவமைப்பாளர்– முதன்மை நிர்வாக அலுவலர்.**

**ஊதியம்:–**

ஆரம்பத்தில் **20000** முதல் ஊதியம் பெற வாய்ப்புள்ளது. நல்ல வித்தியாசமான அறைகலன்களை வடிவமைத்தால் **1,00,000** மாத ஊதியம் பெறலாம்.

**தேவையான அனுபவம்:–**

அறைகலன்களை வடிவமைப்பதில் முன் அனுபவம் மிகுந்த பலனளிக்கும்.



**தொழில் குறியீட்டு எண் (தகுதி)**

| Standard | Code | Description |
|---|---|---|
| NCO 2015 | 2163.0400 | Furniture Designer |
| ISCO 2008 | 2163 | Furniture Designer |
| NIC 2008 | 31001 | NA |
| QP Reference | NA | NA |
| NSQF | NA | NA |